# பொருளியல்

## வருமானவழி தேசிய கணக்கு



The National e-learning Portal for The General Education

Start Your Learning Journey with e-thaksalawa

**தேர்ச்சி –5.0**

**தேர்ச்சி மட்டம் - 5.5**

# வருமான வழியிலான தேசிய கணக்கு

ஒரு பொருளாதாரம் காரணிச் சேவைகளைப் பயன்படுத்தி பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் போது பெற்றுக் கொள்ளுகின்ற காரணிவருமானங்களைப் பயன்படுத்தி பொருளாதார நடவடிக்கைகளின் பணப்பெறுமதியை மதிப்பீடு செய்தல் வருமான வழியிலான தேசிய கணக்கு எனப்படும்.

வருமான வழியிலான தேசிய கணக்குக்குள் பின்வரும் வருமானங்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை

1. மாற்றல் வருமானம் உ-ம் ஓய்வூதியம், நன்கொடைகள்
2. சட்டவிரோத தொழில் வருமானங்கள்
3. பழைய சொத்துக்களின் மீள்விற்பனை வருமானங்கள்
4. அரசுக்கு கடன் வழங்கிப் பெற்றுக்கொண்ட வட்டி வருமானம்

தொகுப்பு :- திரு இ. பிரபாகரன் (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

கணனி வடிவமைப்பு :- திரு . இ . சிறிதரன் (கணனி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## காரணி வருமானங்கள்

நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி ஆகிய காரணிகளை பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுத்தி பெற்றுக்கொள்ளுகின்ற வருமானங்களை காரணி வருமானங்கள் என்பர். காரணி வருமானங்களை பின்வரும் ஐந்து மூலங்களின் கீழ் வகைப்படுத்தி நோக்கலாம்.

### 1 வேலை வாய்ப்பு வருமானங்கள்

உற்பத்தி செயற்பாட்டுக்கு உழைப்புக் காரணியைப் பயன்படுத்தி பெற்றுக் கொள்ளகின்ற வருமானங்கள் வேலை வாய்ப்பு வருமானம் எனப்படும். இதற்குள் உள்ளடங்கும் விடயங்கள்

1. சம்பளம் வேதனம்
2. மிகையூதியம்
3. தொழில் வழங்குனரால் பங்களிப்பு செய்யப்படும் சமூகப்பாதுகாப்பு கொடுப்பனவு
4. வேலைவாய்ப்பில் உள்ளவர்களுக்குகிடைக்கின்ற காப்புறுதிச்சேவை, சுகாதார சேவை.
5. இடர் கொடுப்பனவுகள், ஊழியர்களுக்குரிய நஷ்டஈடுகள்

தொகுப்பு :- திரு இ. பிரபாகரன் (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)
கணனி வடிவமைப்பு :- திரு . இ . சிறிதரன் (கணனி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## 2 வாடகை வருமானம்

மெய்சொத்துக்கள் மற்றும் இயற்க்கை வளங்களை வாடகைக்கு விடுவதால் பெறப்படும் வருமானமே வாடகை வருமானம் எனப்படும். இதற்குள் உள்ளடங்கும் விடயங்கள்.

1. நிலையான சொத்துக்கள் மற்றும் இயற்க்கை வளங்களை வாடகைக்கு விடுவதன் மூலம் உழைக்கப்பட்ட வாடகை வருமானம்.
2. வாடகை வீட்டுக்கான கூலி மற்றும் உரிமையாளர் தாமே வசிக்கின்ற வீட்டுக்கான வாடகை.
3. அறிவு பூர்வமான சொத்துக்களுக்காக கிடைக்கும் வருமானங்கள்.

## 3 தேறிய வட்டி வருமானம்


நிதி நிறுவனங்கள் தனது நிதி மூலத்தைப் பயன்படுத்தி பெற்றுக் கொண்ட வட்டி வருமானத்திற்கும் தமது நிதி மூலத்திற்கான செலுத்திய வட்டிக் கொடுப்பனவுக்கும் இடையிலான வித்தியாசம் தேறிய வட்டி வருமானம் எனப்படும்.

## 4 சுயதொழில் வருமானம்/கலப்பு வருமானம

கம்பனிகளாக பதிவுசெய்யப்படாத தனிவியாபாரம், பங்குடமை வணிகம், கூட்டுறவு வியாபாரம், விவசாயிகள் சுய தொழிலில் ஈடுப்டுள்ள பல்வேறுபட்ட நுட்பவியலாளர்கள் மற்றும் தொழில் வாண்மையாளர்கள் பெறும் வருமானங்களை கலப்பு வருமானம் என்பர்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

5






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**மொத்த உள்நாட்டு வருமானம்(G.D.I)**

ஒரு நாடு குறித்த காலப்பகுதியில் சகல உற்பத்தி நடவடிக்கைகள் காரணமாகவும் உற்பத்திக் காரணிகள் மூலம் உழைக்கப்படும் வருமானக் கூறுகளின் கூட்டு மொத்தம் மொத்த உள்நாட்டு வருமானம் எனப்படும்.

மொத்த உள்நாட்டு வருமானம் = வேலைவாய்ப்பு வருமானம் + வாடகை வருமானம் + தேறிய வட்டி வருமானம் + கம்பனி வருமானம் + கலப்பு வருமானம்

**Note**

SNA 2008 புதிய தேசியக் கணக்கின்படி இலங்கை மொத்த உள்நாட்டு வருமானத்துக்குள் உள்ளடங்கும் கூறுகளை பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளது.

01 ஊழியர் சேவை வருமானம — CE — Compensation of Employees

02 மொத்த தொழிற்பாட்டு மிகை — COS — Cross operating surplus

ஊழியம் தவிர்ந்த ஏனைய காரனிகளால் உற்பத்திக்கு பங்களிப்புச் செய்து பெற்றுக் கொள்ளும் வருமானங்களைக் குறிக்கும் இதற்குள் வட்டி, வாடகை, மொத்த இலாபம் என்பன உள்ளடங்கும்.

தொகுப்பு :- திரு இ. பிரபாகரன் (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)
கணனி வடிவமைப்பு :- திரு . இ . சிறிதரன் (கணனி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

மொத்த தொழிற் பாட்டு மிகையின் பிரதான கூறுகள்

01 தேறிய தொழிற்பாட்டு மிகை (Net Operating Surplus—NOS)

தொழில் பாட்டு மிகையிலிருந்து மூலதன நுகர்வை கழிக்க வருவது தேறிய தொழிற்பாட்டு மிகை எனப்படும்.

02 கலப்பு வருமானம் (Mixed Income - MI

03 நிலையான மூலதன நுகர்வு (Consumption of fixed capital– CFC)

ஊற்பத்தி செயற்பாட்டின் போது மூலதனச் சொத்துக்களின் மீளுருவாக்கத்துக்காக செய்யப்படும் செலவு நிலையான மூலதன நுகர்வு (தேய்வு)எனப்படும்.

உற்பத்தி மீதான உதவுதொகைகள் கழித்த ஏனைய வரிகள்

உற்பத்தி செயன்முறையின் போது அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட உற்பத்திக்கான வரிகள் நீங்கலான உரிமக் கட்டணம், நிலையான விதிப்பனவுகள் வடிவிலான வருமானங்கள் என்பன உற்பத்திகள் மீதான ஏனைய வரிகளாக கருதப்படும். அவற்றிலிருந்து உற்பத்திகளுக்கு வழங்ப்பட்ட மானியங்களைக் கழித்து உற்பத்தி மீதான உதவு தொகைகள் கழித்த ஏனைய வரிகள் பெறப்படும்

மேலே கூறப்பட்ட மூன்று பிரதான விடயங்களை கூட்டவரும் பெறுமதி அடிப்படை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமனாகக் காணப்படும்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**வருமான வழியில் சந்தைவிலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணித்தல்**

| விடயம் | பெறுமதி (மில்.ரூபாவில்) |
|---|---|
| 1. ஊழியர் நட்ட ஈடுகள் | 3315064 |
| 2. மொத்த தொழில்பாட்டு மிகை | 7482706 |
| 2.1 தேறிய தொழில் பாட்டு மிகை | 5903633 |
| 2.2 கலப்பு வருமானம் | 761394 |
| 2.3 நிலையான மூலதன நுகர்வு | 817679 |
| 3. உற்பத்தி மீதான உதவு தொகைகள் கழித்த ஏனைய வரிகள் | 44710 |
| 4. அடிப்படை விலைகளில் மொத்த கூட்டிய பெறுமதி | 10842481 |
| 5. உற்பத்தி மீதான உதவு தொகைகள் கழித்த வரி | 996495 |
| 6. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 11838975 |

**தேறிய உநாட்டு வருமானம் (NDI)**

தேறிய உள்நாட்டு வருமானம் = மொத்த உள்நாட்டு வருமானம் - நிலையான மூலதன நுகர்வு

**மொத்த தேசிய வருமானம் (GNI)**

மொத்த தேசிய வருமானம் = மொத்த உள்நாட்டு வருமானம் + வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம்

**தேறிய தேசிய வருமானம் (NNI)**

தேறிய தேசிய வருமானம் = மொத்த தேசிய வருமானம் + நிலையான மூலதன நுகர்வு

**செலவிடத்தக்க தேசிய வருமானம்**

செலவிடத்தக்க தேசிய வருமானம் = மொத்த தேசிய வருமானம் + வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய நடைமுறை மாற்றங்கள்

தொகுப்பு :- திரு இ. பிரபாகரன் (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)
கணனி வடிவமைப்பு :- திரு . இ . சிறிதரன் (கணனி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## தனியார் வருமானம் / வீட்டுத்துறை வருமானம் (Personal Income - PI)

தேசிய வருமானத்திலிருந்து வீட்டுத்துறைக்கு கிடைக்காத வருமானங்களை நீக்கி தேசிய வருமானத்துக்குள் உள்ளடங்காத வீட்டுத்துறைக்கு கிடைக்கும் வருமானங்களை கூட்டி தனியார் வருமானம் பெறப்படும்.

தனியார் வருமானம் / வீட்டுத்துறை வருமானம் கணிப்பீடு

| விடயம் | பெறுமதி |
|---|---|
| மொத்த தோசிய வருமானம | XXX |
| கூட்டு ( +) | |
| வீட்டுத்துறைக்கு கிடைத்த மாற்றல்கள் (ஓய்வூதியம்+வெளிநாட்டிலிருந்து கிடைத்த தனியார்மாற்றல்) | XXX |
| அரசுக்கு கடன்வழங்கி பெறப்பட்ட வட்டிவருவாய் | XXX |
| வீட்டுத்துறைக்கு கிடைத்த ஏனைய மானியங்கள் | XXX |
| கழிக்குக ( - ) | |
| பகிரப்படாத கம்பனி இலாபங்கள் | XXX |
| நிலையான மூலதன நுகர்வு | XXX |
| கம்பனி இலாப வரி | XXX |
| சமூக பாதுகாப்புக்கான பங்களிப்பு நிதி | XXX |
| அரசாங்கத்தின் சொத்து வருமானம் | XXX |
| தனியார் வருமானம் | XXX |

### செலவிடத்தக்க தனியார் வருமானம்


செலவிடத்தக்க தனியார் வருமானம் = தனியார் வருமானம் - தனியாள் வருமான வரி

தொகுப்பு :- திரு இ. பிரபாகரன் (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)
கணனி வடிவமைப்பு :- திரு . இ . சிறிதரன் (கணனி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**முதனிலை வருமானம் (Primary Income - PI)**

உற்பதி செயற்பாட்டில் ஈபடுவதன் விளைவாக அல்லது உற்பத்திக்கு அவசியமான சொத்துக்களை உருத்தாக்கிக் கொள்வதன் விளைவாக நிறுவன அலகுக்கு கிடைக்கும் வருமானத்தை முதனிலை வருமானம் என்பர்.இதற்குள் உள்ளடங்கும் விடயங்கள் நான்கு




உற்பத்தி செயன் முறையால் உருவாக்கப்படும் முதனிலை வருமானங்கள் உற்பத்தியின் மொத்தக் கூட்டப்பட்ட பெறுமதிக்கு சமனாகக் காணப்படும்.

$$PI = GVA = \sum (CE + OS + MI + (t - s))$$

தொகுப்பு :- திரு இ. பிரபாகரன் (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)
கணனி வடிவமைப்பு :- திரு . இ . சிறிதரன் (கணனி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## மெய் தேசிய வருமானம் / உண்மைத் தேசிய வருமானம் (Real National Incom - RNI)

நிலையான விலைகளிலான மொத்த தேசிய வருமானத்தோடு வெளிநாட்டு வர்த்தகத்தின் கீழ் ஏற்றுமதி கொள்வனவுச் சக்கியில் ஏற்பட்ட தாக்கத்தினை சீராக்கி பெறப்படுவது மெய்தேசிய வருமானமாகும்.

மெய்தேசிய வருமானம் = [நிலையான விலைகள் மொத்த தேசிய வருமானம்] + [ஏற்றுமதி காரணமாக வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட தாக்கம்]

அல்லது

மெய்தேசிய வருமானம் = [நிலையான விலைகள் மொத்த தேசிய வருமானம்] + [ஏற்றுமதி பெறுமதி / இறக்குமதி விலைச்சுட்டெண்] - [இறக்குமதி பெறுமதி / ஏற்றுமதி விலைச்சுட்டெண்]

தொகுப்பு :- திரு இ. பிரபாகரன் (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)
கணனி வடிவமைப்பு :- திரு . இ . சிறிதரன் (கணனி வள நிலையம், வடமராட்சி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk